மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு புதியதாக தொடங்கவிருக்கிற முயற்சியே அந்த தீமைகளை களைய வேண்டும் என்பதற்காகத்தான்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டு கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது என்ற முத்திரையுடன் நடைபெறக் கூடிய தனியார் சிட்பண்ட் கம்பெனிகள் அடிக்கடி திவாலாகி சேமிக்கும் ஏழை மக்களுடைய பணம் மோசடி செய்யப்படுவதால் இதை தடுப்பதற்கும், அரசே உடனடியாக சீட்டு கம்பெனியை துவங்குவதற்கும் முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே நிச்சயமாக மேற்கொள்ளும்.

(முற்பகல் 9·10)

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கருடா சிட் பண்ட்ஸ் மக்கள் பணத்தைப் பறித்துக் கொண்டு பறந்து விட்டது, இதுபோன்று பல சிட் கம்பெனிகள் பறந்து கொண்டிருக்கின்றன. கொள்கை அளவிலே சீட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதாக நீண்ட நெடுங் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்? அதனுடைய கிளைகள் எல்லா மாவட்டங்களிலும் துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முதல் கட்டமாக சென்னை நகரைத் தலைநகராகக் கொண்டு 10 முக்கியமான நகரங்களிலே—குறிப்பாக சென்னையில் 2, வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில்—தொடங்கப்படும்.

இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைத்தல்:—

*வினா எண். 480—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைக்க கோரி இந்து சமூகத்தினர் கோரிக்கைகள் ஏதும் வைத்துள்ளனரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லை என்று கூறினார்கள். ஆனால் கோரிக்கை வந்து இருக்கிறதா என்றநிலைக்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? ஆசையற்றவர்கள் தான் அறநிலையத் துறையில் இருக்கவேண்டுமென்று பொது நியதியை அரசு ஏற்குமா? தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் ஆசையால் தான் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து அந்த நிர்வாகம் நல்ல முறையிலே நடக்க இதுபோன்ற வாரியத்தை அமைக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா என்ற வினா எழுப்பப்பட்டதற்கு அரசுக்கு கோரிக்கை வரவில்லை என்று பதில் அளித்து இருக்கிறேன். அந்த வாரியம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். 1925ஆம் ஆண்டு முதல் இப்படிப்பட்ட பல்வேறுநிலைகளிலே பல்வேறு அறிஞர்கள், பெரியவர்கள் எல்லாம் இதை ஆராய்ந்து அப்படிப்பட்ட வாரியம் எல்லாம் நடைபெற்று அப்படிப்பட்ட வாரியமும் சரியாக நடைபெறாமல் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த திரு. வெங்கட்டரமணராவ் நாயுடு அவர்கள் தலைமையிலே திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை போன்றவர்கள் எல்லாம் வாரியத்திலே தலைவர்களாக இருந்தவர்களே குழுவாக இருந்து அவர்கள் எல்லாம் ஆராய்ந்து கண்டறிந்ததற்குப் பிறகு அரசு அதிலே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்து அரசு இப்போதுநடைமுறையிலிருக்கிற இந்தச்சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அதிலேயிருந்து மாறி மீண்டும் பழைய நிலைமைக்குப் போவது பலனளிக்காது என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்து மதத்தினுடைய மனம் புண்படும் அளவில் மதுரை ஆதீனத்தைச் சேர்ந்தவர்களுடைய பேச்சுக்கள் இருக்கின்றன. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாரியம்பற்றி கேள்வி, அதுபற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, புண்டைய தமிழர்களின் சிற்பக் கலைக்குச் சான்று பகரும் இந்து மதத்தினருடைய வழிபடும் ஆலயங்களாக இருக்கின்றவைகளில் விளக்குகள் ஏற்றி வைப்பதற்குக்கூட போதிய வருவாய் இல்லாமல் அவைகள் எல்லாம் பராமரிக்கப்படாத நிலையிலே உள்ளதால் இம்மாதிரியான வருவாய் குறைந்த கோவில்களைக் கருத்திலே கொண்டு அவற்றையெல்லாம் பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் விரைவிலே நடவடிக்கை எடுக்குமா ?

[1982 மார்ச் 16

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். : தலைவர் அவர்களே, இது மிகுந்த சிக்கலானது. பல்வேறு முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டாலும்கூட விரைவிலே தீர்க்க முடியாத பிரச்சினையாக வளர்ந்து கொண்டு வருகிறது. அறநிலையத் துறைஉருவாக்கப்பட்டதற்குப் பிறகு சுமார் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆலயங்களை இந்தத் துறைக்குள்ளே கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே உள்ள சுமார் 25 ஆயிரம் ஆலயங்கள் வருமானம் இல்லாத ஆலயங்களாக இருக்கின்றன. அவைகளையும் அறநிலையத் துறைக்குள்ளே கொண்டு வந்து இருக்கின்றார்கள். வருமானம் இல்லாத ஆலயங்களையும் அறநிலையத் துறைக்குள்ளே கொண்டு வருகிறபோது அவற்றின் வருமானத்தைப் பெருக்குவதும் கஷ்டமாக இருக்கிறது, அவற்றைப் பராமரிப்பதும் கஷ்டமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எப்படி முடிவு எடுப்பது என்பதுதான் பிரச்சினை. கிராமங்களிலே அந்தந்த மக்கள் எல்லாம் சேர்ந்து ஆலயங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அவைகளுக்கு என்று இருக்கின்ற கொஞ்ச நஞ்ச சொத்துகளைக்கூட மற்றவர்கள் பராதீனம் செய்து கொண்டு அந்த ஆலயங்களுக்கே இல்லாமல் செய்துவிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஆலயங்களைப் பராமரிப்பது என்பதை எடுத்துக் கொள்கிறபோது இத்தனை ஆயிரம் ஆலயங்களுக்கும் எங்கேயிருந்து நிதியை ஒதுக்குவது என்பதும் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே அறநிலையத் துறை இப்படி வருமானம் இல்லாத ஆலயங்களை அந்தந்தக் கிராமங்களிலே—பழங்கால முறையில் அங்கே இருக்கின்ற ஆலய வழிபாட்டிலே நம்பிக்கை இருக்கின்றவர்கள் எல்லாம் சேர்ந்து பாதுகாக்கின்ற பொறுப்பேற்றுக் கொள்கின்ற ஒரு முறையை உருவாக்க இயலுமா என்பதுபற்றி தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற அறநிலையத் துறையினுடைய உயர்மட்ட ஆலோசனைக் குழுவினடத்திலேகூட நாங்கள் அதை ஒரு பொருளாக வைத்து பரிந்துரை கேட்டிருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவுரவர்களே, முஸ்லீம் மதம் போன்ற மற்றைய மதங்களில் பொதுச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு வாரியம் இருக்கிறது. அது போன்று இந்து மதத்திலும் அவர்களே அதன் சொத்துக்களைப் பராமரிப்பதற்கான வாரியம் இருக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வி எழுந்தது என்று கருதுகிறேன் பத்திரிகைகளிலும் பார்த்தோம். கூட்டங்களிலேயும் பேசப்படுகிறது. எனவே இது குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா? வக்ப் போர்டு போன்ற நிர்வாகம் இதையும் நிர்வகிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

1982 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, வக்ப் போர்டு போன்ற அல்லது வேறு மைனாரிட்டி சமுதாய சமய நிறுவனங்களோடு இந்த இந்து சமய நிறுவனங்களை ஒப்பிடுவது அடிப்படையிலேயே பொருத்தமற்றது. காரணம், 85 அல்லது 90 சதவீதம் மக்கள் இந்துக்களாக வாழும் ஒரு நாட்டில் மன்னர்களாலும் மற்றவர்களாலும் பாரம்பரியமாக இந்த ஆலயங்கள் அமைக்கப் பெற்று, சொத்துக்கள் வழங்கப் பெற்று, பாதுகாக்கப்பட வேண்டிய நிலை தொடர்ந்து அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மன்னர்கள் இல்லாத சூழ்நிலையில் இன்றைய தினம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதைப் பாதுகாக்க வேண்டிய கடமைக்கு உள்ளாகியிருக்கிறது; செய்து தீரவேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஒரு அரசு எடுக்கும் முடிவுகளை மற்ற அரசுகள் தொடர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டு காப்பாற்ற வேண்டும். மைனாரிட்டி சமுதாயம் அல்லது மைனாரிட்டி மதத்தினர் என்று கருதப்படுபவர்கள் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே இருக்கிறார்கள். அதற்கும் சில அடிப்படைகள் இருந்தாலும் அதுவும் அரசினுடைய மேலாதிக்கத்திற்குள்ளே தான் இருக்கிறது. வக்ப் போர்டு நிர்வாகத்தை அமைச்சர் பொறுப்பிலே கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். வக்ப் போர்டிலும் அப்படிப்பட்ட சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக, அழிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் பரவலாக வந்து கொண்டு இருக்கின்றன. குறைவாக இருப்பதால் அது உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. அவைகளைப்பற்றிச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்படாத காரணத்தினால் அதில் நடைபெறும் குறைபாடுகள் பொதுமக்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்படுவதில்லை. ஆகவே, இந்து சமுதாயம், அதிகமாக இந்து மக்கள் அதிகமாக இந்து கோயில்கள் என்று இருக்கின்ற அடிப்படையிலே எடுக்க வேண்டிய நடைமுறைகளை மற்ற சிறுபான்மை சமுதாயத்தினரோடு ஒப்பிடுவது உகந்ததும் அல்ல; வளர்ச்சிக்கு ஏற்றதும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலய நிர்வாக அதிகாரிகளின் மூலம் ஆலய நிர்வாகம்

* வினா எண். 481—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய நிர்வாக அதிகாரிகளுக்கு சராசரி 10 கோவில்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்ததை தற்போது கிராம அதிகாரிகளை நீக்கியதையொட்டி ஒவ்வொரு அதிகாரிக்கும் 20 கோவில்களுக்கும் மேலாக கூடுதல் பொறுப்பு தரப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், ஆலயங்களின் நிர்வாகம் சீர்குலையாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?